## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஒரு பொருளானது r ஆரம் கொண்ட வட்டப்பாதையில் இயங்குகிறது. பாதி வட்டம் கடந்தபின் அப்பொருளின் இடப்பெயர்ச்சி

அ. சுழி ஆ. r

இ. 2r ஈ. r / 2

AZ9DAJ


2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் திசைவேகம் காலம் வரைபடத்திலிருந்து அப்பொருளானது

அ. சீரான இயக்கத்தில் உள்ளது.

ஆ. ஓய்வு நிலையில் உள்ளது.

இ. சீரற்ற இயக்கத்தில் உள்ளது.

ஈ. சீரான முடுக்கத்தில் பொருள் இயங்குகிறது.




3. கீழே உள்ள படங்களில் எப்படமானது இயங்கும் பொருளின் சீரான இயக்கத்தினைக் குறிக்கிறது.




4. ஒரு சிறுவன் குடை இராட்டினத்தில் 10 மீ / வி என்ற மாறாத வேகத்தில் சுற்றி வருகிறான். இக்கூற்றிலிருந்து நாம் அறிவது

அ. சிறுவன் ஓய்வு நிலையில் உள்ளான்.

ஆ. சிறுவனின் இயக்கம் முடுக்கப்படாத இயக்கமாகும்.

இ. சிறுவனின் இயக்கம் முடுக்கப்பட்ட இயக்கமாகும்.

ஈ. சிறுவன் மாறாத திசைவேகத்தில் இயங்குகிறான்.

5. ஒரு பொருளின் சமநிலையை அதிகரிக்கப் பின்வருவனவற்றுள் எம்முறையினைப் பின்பற்றலாம்.

அ. ஈர்ப்பு மையத்தின் உயரத்தினைக் குறைத்தல்.

ஆ. ஈர்ப்பு மையத்தின் உயரத்தினை அதிகரித்தல்.

இ. பொருளின் உயரத்தினை அதிகரித்தல்

ஈ. பொருளின் அடிப்பரப்பின் அகலத்தினைக் குறைத்தல்.

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இரு இடங்களுக்கு இடையே உள்ள மிகக் குறைந்த நேர்கோட்டுப் பாதை ____________ எனப்படும்.
2. திசைவேகம் மாறும் வீதம் ____________ ஆகும்.
3. ஒரு பொருளின் திசைவேகமானது காலத்தினைப் பொருத்து அதிகரித்தால் அப்பொருள் ____________ முடுக்கத்தினைப் பெற்று இருக்கிறது என்கிறோம்
4. வேகம்–காலம் வரைபடத்தின் சாய்வு ____________ மதிப்பினைத் தருகிறது.
5. ____________ சமநிலையில் ஈர்ப்பு மையத்தின் நிலை மாறுவதில்லை.

### III. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. | இடப்பெயர்ச்சி | நாட் |
| 2. | வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் | வடிவியல் மையம் |
| 3 | கப்பலின் வேகம் | மீட்டர் |
| 4. | ஒழுங்கான பொருள்களின் ஈர்ப்புமையம் | அகலமான அடிப்பரப்பு |
| 5. | சமநிலை | சீரான திசைவேகம் |

### IV. ஒப்புமை தருக

1. திசைவேகம் : மீட்டர் / விநாடி :: முடுக்கம் : ____________ .

LIVEWORKSHEETS